# சிறுபாணாற்றுப்படை - சிறுபாணன் செல்வழி - ஒரு படவிளக்க உரை

ஆறு என்பது வழி. ஆற்றுப்படுத்துதல் என்பது வழிப்படுத்துதல். இன்ன வழியிற் சென்றால் அல்லது இன்னாரைச் சந்தித்தால் இன்னின்ன நன்மைகள் கிடைக்கும் என்று ஒருவரை வழிப்படுத்தும் இலக்கியம் ஆற்றுப்படை எனப்படும். சங்க இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டில் உள்ள பத்து நெடும்பாடல்களில் ஐந்து பாடல்கள் ஆற்றுப்படை இலக்கியங்கள். அவை: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் எனப்படும் கூத்தராற்றுப்படை. பத்துப்பாட்டு நூல்களுள் முதல் நான்குமே ஆற்றுப்படை இலக்கியங்கள்தாம். மலைபடுகடாம் இறுதியில் உள்ளது. இவற்றுள் மலைபடுகடாம்தான் மிகச் சிறந்தது என்பர். எனவேதான் உச்சகட்டமாக அது பத்துப்பாடல்களுள் இறுதியில் வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறுவர். எனினும் என்னை மிகக் கவர்ந்தது சிறுபாணாற்றுப்படைதான். சிறப்பான உவமை அழகும், மிகச் சிறந்த வருணனை அழகும், சீரிய சொல்லாட்சியும், சிலிர்க்கவைக்கும் காட்சிப்படுத்துதலும் இப் பாடலின் சிறப்பு அம்சங்கள்.

யாழ் என்பது சங்க காலத்தில் பெரிதும் வழங்கிய ஓர் நரம்பிசைக் கருவி. இன்றைய வீணையின் முன்னோடி இது என்பர். இதன் உருவத்தையும், கட்டமைப்பையும் பொருத்து இது வில் யாழ், மகர யாழ், செங்கோட்டியாழ், மயில்யாழ் என பலவகைப் படும். இருப்பினும் இதில் உள்ள நரம்புகளின் எண்ணிக்கையைப் பொருத்து இது சிறிய யாழ், பெரிய யாழ் எனவும் அழைக்கப்படும். 7 நரம்புகளைக் கொண்டது சிறிய யாழ். இது சீறியாழ் எனப்படும். 21 நரம்புகளைக் கொண்டது பெரிய யாழ். இது பேரியாழ் எனப்படும். சீறியாழைக் கொண்டு இசையமைத்துப் பாடுவோர் சிறுபாணர் என்றும் பேரியாழைக் கொண்டு இசையமைத்துப் பாடுவோர் பெரும்பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களை ஒரு மன்னன் அல்லது வள்ளலிடத்தில் ஆற்றுப்படுத்தும் பாடல்கள் இவரின் பெயராலேயே அழைக்கப்பட்டன.

பத்துப்பாட்டில் மூன்றாவதாக அமைந்திருக்கும் பாடல் சிறுபாணாற்றுப்படை. இதனை இயற்றியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். இடைக்கழி நாடு சென்னையிலிருந்து

புதுச்சேரி போகும் வழியில் கல்பாக்கம் அருகில் உள்ள பகுதி. இப்பகுதி இன்றைக்கும் அதே பெயரால் அழைக்கப்படுகிறது. இங்குள்ள நல்லூர் சாலையோரத்தில் உள்ளது. அங்கு இந்தப் புலவருக்கு ஒரு சிறு கோயிலும் மணிமண்டபமும் உள்ளன. இவரின் இயற்பெயர் தத்தன். மரியாதையாக தத்தனார் என்று அழைக்கப்படும். சங்க இலக்கிய மரபில் நல் என்ற அடைமொழி பெயருக்கு முன்னால் சேர்க்கப்பட்டு நல் தத்தனார் என்றாகி நத்தத்தனார் ஆனது எனலாம்.

இந்தப் பாடலின் தலைவன் ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் என்பான், ஓய்மாநாடு என்பது திண்டிவனம் பகுதியாகும். திண்டிவனத்தின் ஒரு பகுதியாக இப்பொழுது விளங்கும் செங்கம் என்ற இடம்தான் சங்ககாலத்தில் நல்லியக்கோடனின் தலைநகராக இருந்தது.

வறுமையில் உழலும் ஒரு சிறுபாணன் யாராவது ஒரு சிறந்த வள்ளலிடம் சென்று, அவரைப் பாடி மகிழ்வித்து பரிசில் பெற்று வரலாம் என்ற நினைப்பில் தன் குடும்பத்தாருடன் கால்போன வழியே சென்றுகொண்டிருக்கிறான். அப்போது எதிரில் இன்னொரு சிறுபாணனைச் சந்திக்கிறான். புதியவன் மிகுந்த செல்வச் செழிப்பில் இருக்கிறான். தானும் வறுமையில் இருந்ததாகவும், நல்லியக்கோடனிடம் சென்று பாடிப் பரிசில் பெற்று மீள்வதாகவும், வறுமைநிலைப் பாணனும் நல்லியக்கோடனிடம் சென்றால் மிகுந்த செல்வம் பெறலாம் என்று கூறி அவனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்ததுவே இந்தப் பாடல்.

269 அடிகள் கொண்ட இப் பாடலில் பாணனுடன் வரும் விறலியரின் அழகை வெவ்வேறு கோணங்களில் அழகிதாக விவரிக்கும் புலவரின் பாங்கு பின்னாளைய பாதாதிகேச வருணனைக்கெல்லாம் மிகச் சிறந்த முன்னோடியாகத் திகழ்கிறது. புலவர் காலத்து, மூவேந்தரின் தலைநகர்களான வஞ்சி, மதுரை, உறந்தை ஆகிய ஊர்களையும், அவர் காலத்து கடையெழு வள்ளல்களின் சிறப்பையும் விதந்தோதும் வரலாற்றுப் பெட்டகமாகவும் இப்பாடல் திகழ்கிறது. ஓய்மாநாட்டுக் கடற்கரையின் நெய்தல்வளம், உள்நாட்டுக் காடுகளின் முல்லை வளம், நதியோர நாட்டின் மருதவளம் எனப் பல்வகை வளங்களைப் பாங்குற வருணிக்கிறது இப் பாடல். பாணனின் கையிலிருக்கும் சீறியாழை அப்படியே நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் அற்புத வரிகள் மெய்சிலிர்க்கவைப்பவை. அக் காலத்து மன்னர்களின் கலையார்வம் மிக்க வள்ளன்மையால் கலைஞர்கள் சிறப்புப் பெற்றமையே இப்பாடலின் உட்பொருளாயினும், அதைப் புலவர் சொல்லியிருக்கும் அழகும், அவரின் அற்புதமான நடையும், கவித்துவமும் இப் பாடலை ஓர் உன்னதமான இலக்கியமாக ஆக்கியிருக்கின்றன.